**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**C.C. 356/2022**
**Prosecution Witness : 11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. மாரியப்பன் | Caste | : | |
| Father's Name | : | திரு. வெள்ளை | Calling | : | |
| Village | : | காஞ்சிரம்பேட்டை கிராமம் | Religion | : | இந்து |
| Taluk | : | மதுரை | Age | : | 67 |
| | | | Dated | : | 05.03.2025 |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**Accused present. Both side counsels present.**

**பட்டியல் சாட்சி 13 திரு. மாரியப்பன் ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 11 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.**

நான் கடைசியாக தேனி மாவட்டம், SC, ST பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றேன். கடந்த 12.11.2013 ம் தேதி இரவு 08.30 மணிக்கு கண்மணி என்கிற முனியம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி 11.11.2013 ம் தேதி மாலை 05.00 மணிக்கு வீட்டிற்கு வந்த அவருடைய கணவர், அவரை செம்பட்டி வேலுச்சாமி நாயக்கர் ஓட்டலில் வைத்து, திருமைய கவுண்டன் பட்டியை சார்ந்த நாகராஜ் பணம் கொடுக்க வேண்டிய சம்மந்தமாக தன்னை அசிங்கமாக பேசி அடித்து மிரட்டியதாகவும், அன்றைய தினமே இரவு 09.30 மணி அளவில் தனது கணவர் மற்றும் மகன், உறவினர்களுடன் காத்திருந்து அந்த வழியாக வந்த நாகராஜூடன் செம்பட்டி ஓட்டலில் இருந்த பால்பாண்டி என்பவரை அடித்தது பற்றியும், அதனால் மேற்படி அவரது கணவர் மற்றும் மகனுக்கு

காயம் ஏற்பட்டது பற்றி எழுத்து மூலமான புகார் கொடுத்தார். அந்த புகாரை பெற்று காவல்நிலைய குற்ற எண். 288/2013, இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(i) – ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை Ex. P5.

__எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–__

முதல் தகவல் அறிக்கை இரண்டு நாட்கள் கால தாமதமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கான காரணம் சொல்லப் படவில்லை. புகாரை யார் எழுதினார்கள் என்று தெரியாது. அந்த புகாரில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி புகாரை SP அலுவலகத்திற்கு முன்பு வைத்து நான் பெற்றுக் கொண்டேன் என்று சொன்னால் தவறு. புகாரில் மூன்று நபர்களின் பெயர்களை குறிப்பிட்டும், அடையாளம் தெரிந்த, பெயர் தெரியாத இருபது நபர்களைக் குறிப்பிட்டும் சொல்லப்பட்டு உள்ளது என்றால் சரிதான். சம்பவம் 09.00 மணிக்கு நடந்ததாக புகாரில் சொல்லப்பட்டு உள்ளது. முதல் தகவல் அறிக்கையில் இரவு 08.00 மணிக்கு நடந்ததாக உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நேரம், தேதியில், சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2025.03.05 18:25:33 +0530